**ஜனவரி – 15**

# TNPSC துளிகள்

- ❖ வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான மத்திய அரசின் உன்னத திட்டங்களில் ஒன்றான பிரதான் மந்திரி ரோஜ்கர் புரோட்ஸ்தான் யோஜனா திட்டம் (Pradhan Mantri Rozgar Protsahan Yojana - PMRPY) 2019-ஆம் ஆண்டு, ஜனவரி 14-ஆம் தேதி வரையில் ஒரு கோடி பயனாளிகள் என்ற பிரம்மாண்ட இலக்கை அடைந்திருக்கின்றது.
- ❖ இந்திய குடியரசுத் தலைவர், சுகீர்த்திமய ராஷ்டிரதீப் ஜெனரல் பூர்ண சந்திர தாபா என்பவருக்கு இந்திய ராணுவத்தின் கௌரவ ஜெனரல் பட்டத்தினை வழங்கினார்.
  - இந்தியாவுடன் நீண்டகால மற்றும் நட்பு உணர்வை ஏற்படுத்தி வரும் நேபாளத்தைப் பாராட்டும் விதமாக நேபாள ராணுவத்தினுடைய பணியாளர்களின் தலைமை அதிகாரிக்கு இவ்விருது அளிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## சீதா ராமா நீர்ப்பாசனத் திட்டம்

- ❖ தெலுங்கானா அரசின் சீதா ராமா நீரேற்று நீர்ப்பாசனத் திட்டத்திற்கான பசுமை அனுமதி வழங்கப்பட்டது.
- ❖ இந்த நீரேற்று பாசனத் திட்டம் ஏற்கனவே உள்ள தும்முகுடெம் பாசன அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நீரோட்டத்திற்கு எதிராக கோதாவரி நதிக்கு நீரைப் பிரித்து அனுப்பும். இதன் மூலம் தெலுங்கானாவின் பத்வாரி கோதகுடெம், கம்மம் மற்றும் மகபூபாபாத் ஆகிய மாவட்டங்களில் உள்ள 2,72,921 ஹெக்டேர் நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும்.
- ❖ இத்திட்டத்தின் நோக்கமானது, பாசனத்திற்காக நீரை வழங்குவது மட்டுமல்லாமல், ஏற்கனவே உள்ள மற்றும் முன்மொழியப்பட்ட பாசனத் திட்டங்களுக்கும் அது செல்லும் வழியில் உள்ள நீர்த் தொட்டிகள், கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கும் நீரை வழங்குவது ஆகும்.

**Godavari water for irrigation**

| | Sita Rama LI Project | Kannepalli LI Scheme |
|---|---|---|
| Proposed water utilisation | 70.4 TMC ft | 4.5 TMC ft |
| Proposed ayacut | 9,36,000 acres | 45,527 acres |
| | ₹ 11,932 crore | ₹ 499 crore |
| Land required | 12,212 acres | 3,642 acres |
| Forest land | 4825 acres | 645 acres |
| Submergence area | 4825 acres | |

## திரிஷ்னா எரிவாயுத் திட்டம்

- தேசிய வனவுயிர் மன்றமானது ஒஎன்ஜிசி நிறுவனத்தின் திரிஷ்னா எரிவாயுத் திட்டத்திற்கான தனது அனுமதியை வழங்கி இருக்கின்றது.
- அரசுக்குச் சொந்தமான ஒஎன்ஜிசியின் திரிபுரா மாநிலப் பிரிவு கோமதி மாவட்டத்தில் பெலோனியா துணைப் பகுதியில் உள்ள திரிஷ்னா வனவிலங்கு சரணாலயத்திலிருந்து கூடிய விரைவில் இயற்கை எரிவாயுவைத் தோண்டி எடுக்கும் பணியை ஆரம்பிக்கும்.
- மாநில வனவுயிர் மன்றத்தின் பரிந்துரைகளையடுத்து, தேசிய வனவுயிர் மன்றமானது இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கி இருக்கின்றது.

### *தேசிய வனவுயிர் மன்றம்*

- 1972-ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பு தேசிய வனவுயிர் மன்றமாகும்.
- இம்மன்றம் பிரதமரால் தலைமை தாங்கப்படுகின்றது.
- வனவுயிர் சம்பந்தமான அனைத்து விவகாரங்களை மறுபார்வையிடுவதிலும் தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களுக்கு உள்ளேயும், அருகேயும் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கிடுவதிலும் இது ஒரு உச்சகட்ட அமைப்பாக பணியாற்றுகின்றது.

## உலகளாவிய வீட்டுவசதி தொழில்நுட்பத்திற்கான சவால்

- மாற்றுத் தொழில்நுட்பங்களையும் பொருட்களையும் பயன்படுத்தித் துரிதமாகவும் விலை மலிவாகவும் சிறந்ததாகவும் 6000 வீடுகளை கட்டுவதற்காக தொழில்நுட்ப புதுமைக்கான மானியமாக மத்திய அரசு ரூ.150 கோடியை அளிக்கும்.
- பொறுப்புடைய அமைச்சகம் : வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்.

## உச்ச நீதிமன்ற நீதிபதிகள்

- நீதிபதிகள் தினேஷ் மகேஷ்வரி மற்றும் சஞ்சீவ் கன்னா ஆகியோர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர்.
- இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் இந்த பதவிப் பிரமாண நிகழ்ச்சியின் போது நீதிபதிகள் மகேஷ்வரி மற்றும் கன்னா ஆகியோருக்கு பதவிக்கான பிரமாணத்தை செய்து வைத்தார்.




- உச்ச நீதிமன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 31 ஆகும். நீதிபதிகள் மகேஷ்வரி மற்றும் கன்னா ஆகியோரின் பதவிப் பிரமாணங்களோடு சேர்த்து தற்போது நீதிபதிகளின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்திருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## வடதுருவ காந்தப்புல இயக்கம்

- வடதுருவ காந்தப்புல மையமானது கனடாவிலிருந்து சைபீரியாவை நோக்கி உருண்டோடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- இந்த இயக்கம் பூமியின் மையப் பகுதியின் உள்ளே திரவ நிலையில் உள்ள இரும்பு நிரம்பி விடுவதால் ஏற்படுகின்றது.




- ஜனவரி 15-ஆம் தேதியன்று உலக காந்தப்புல மாதிரியை விஞ்ஞானிகள் மேம்படுத்தி இருக்கின்றனர். இம்மாதிரி புவியின் காந்தப்புல களத்தை விவரிக்கின்றது. மேலும் அனைத்து நவீன ஊடுருவும் பயணங்களுக்கும் அடிப்படையாக இது இருக்கும். இந்த அமைப்பில் இருக்கும் தகவல்கள் கடல்களில் பயணிக்கும் கப்பல்களுக்கும் திறன் பேசிகளில் உள்ள கூகுள் வரைபடங்களுக்கும் வழிகாட்டும்.

# மாநிலச் செய்திகள்

## பார்மலின் மீன்கள் மீதான தடை

- பீகார் மாநில அரசானது, பாட்னா மாநகராட்சிப் பகுதியில் 15 தினங்களுக்கு மீன்களின் விற்பனை, போக்குவரத்து மற்றும் இருப்பு ஆகியவற்றுக்குத் தடை விதித்திருக்கின்றது.
- மீன் மாதிரிகளில் பார்மலின், ஈயம், பாதரசம் மற்றும் காட்மியம் ஆகியவற்றின் துணுக்குகள் அதிக அளவில் இருப்பதாக கண்டறியப்பட்ட பிறகு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.




- இத்தடை 2006-ஆம் ஆண்டின் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயங்கள் சட்டத்தின்படி விதிக்கப்பட்டிருக்கின்றன.
- வழக்கமான வரம்பிற்கு அப்பால் பார்மலின் மற்றும் இதர கனமான உலோகங்களின் பயன்பாடு நிமோனியா, மூச்சுக்குழாய் அழற்சி, மஞ்சள் காமாலை மற்றும் புற்றுநோய் போன்ற பல்வேறுபட்ட நோய்களை ஏற்படுத்தும்.

## கடல் ஆமைத் திருவிழா - ஒடிசா

- 2019-ஆம் ஆண்டின் ஜனவரி 13-ஆம் தேதி ஒடிசாவின் பூரி கடற்கரை தனது முதல் கடல் ஆமைத் திருவிழாவைக் கண்டுகளித்தது.




- உலகின் ஆலிவ் ரெட்லி ஆமைகளின் எண்ணிக்கையில் பாதியையும், இந்தியாவின் கடல் ஆமைகளின் எண்ணிக்கையில் 90 சதவீதத்தையும் ஒடிசா கொண்டிருக்கின்றது.

***பின்னணி***

- இந்திய நீர்நிலைகளில் 5 வகையான கடல் ஆமை இனங்கள் உள்ளன. அவையாவன : லெதர்பேக் (பாதிப்பிற்குள்ளானது), லாகர்ஹெட் (அருகி வரும் நிலை), ஹாக்ஸ்பில் (தீவிரமாக அருகி வரும் நிலை), கிரீன் (அருகி வரும் நிலை) மற்றும் ஆலிவ் ரெட்லி.

- இந்தியாவில் கடல் ஆமைகள் 1972-ஆம் ஆண்டின் இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதுகாக்கப்படுகின்றன.
- இவை IUCN (International Union for Conservation of Nature) அமைப்பின் சிவப்புப் பட்டியலின்படி பாதிப்பிற்குள்ளானதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.




- இந்த ஆமைகள் மற்றும் அவற்றின் பாகங்கள் மீதான சர்வதேச வர்த்தகம் CITES (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) என்ற அமைப்பின் பட்டியல்-I என்பதின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிலிப் கோட்லர் தலைமைத்துவத்திற்கான விருது

- “இந்திய உலக சந்தைப்படுத்துதல் மாநாடு” என்ற அமைப்பால் முதலாவதான பிலிப் கோட்லர் தலைமைத்துவ விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.
- “உலக சந்தைப்படுத்துதல் மாநாடு” இதற்கு முன்பு விளம்பரப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள சாதனைகளை அங்கீகரிக்கப்பதற்காக மட்டுமே விருதுகளை வழங்கியிருக்கின்றது.
- இந்த விருது மூன்று அடிப்படை அலகுகளான மக்கள், லாபம் மற்றும் புவி ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இது வருடாந்திரமாக ஒரு நாட்டின் தலைவருக்கு அளிக்கப்படும்.



## காந்தி அமைதி விருது

- 2015, 2016, 2017 மற்றும் 2018-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குப் பின்வரும் அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
  1. கிராமப்புற வளர்ச்சி, கல்வி, இயற்கைவள மேம்பாடு ஆகியவற்றில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்த கேந்திரா 2015-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  2. இந்தியாவெங்கிலும் உள்ள பல மில்லியன் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்ததில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக அக்சய பாத்திர அறக்கட்டளை மற்றும் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றுவதை ஒழிப்பது மற்றும் துப்புரவு நிலையை மேம்படுத்துவதில் தனது பங்களிப்பை ஆற்றியது ஆகியவற்றிற்காக பணியாற்றிய சுலப் இண்டர்நேஷனல் என்ற நிறுவனம் ஆகிய இரண்டும் கூட்டாக 2016-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
  3. இந்தியா முழுவதுமான மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், கிராமப்புற மேம்பாடு, பாலின மற்றும் சமூக சமத்துவம் ஆகியவற்றிற்கு தனது பங்களிப்பை ஆற்றியதற்காகவும் கிராமப்புற மற்றும் பழங்குடியின குழந்தைகளுக்கு கல்வியை அளித்தலில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காகவும் ஏகல் அபியான் அறக்கட்டளை 2017-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  4. உலகெங்கிலும் மற்றும் இந்தியா முழுவதிலும் தொழுநோய் ஒழிப்பில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக யோஹேய் சசாகாவா 2018-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த வருடாந்திர விருதானது மகாத்மா காந்தியின் 125-வது பிறந்த தினத்தின் நினைவாக இந்திய அரசாங்கத்தால் 1995-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

### *காந்தி அமைதி விருது*

- காந்தி அமைதி விருதானது அஹிம்சை மற்றும் இதர காந்திய வழிகளின் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் பணியில் தங்கள் பங்களிப்பை ஆற்றிய தனிப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது.
- மத்திய கலாச்சார அமைச்சகமானது இவ்விருதுகளை வழங்குவதற்கான பரிந்துரைகளை ஏற்கும் பொறுப்புடைய நிறுவனமாகும்.
- இந்த விருது முதன்முறையாக 1995 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதில் இருந்து நான்காண்டுகளுக்கான விருது பெறுபவர்களை அறிவித்தது இதுவே முதல் முறையாகும்.
- இவ்விருதானது 1 கோடி நிதி, சான்றிதழ் மற்றும் ஒரு கைவினைப் பொருள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## இந்து பரிசு - 2018

- இந்து செய்தித்தாளின் ஒரு பகுதியான இந்து இலக்கிய மதிப்பாய்வுரையால் வழங்கப்படும் இந்து இலக்கியப் பரிசு அல்லது இந்து சிறந்த புனைவு விருதானது ஒரு இந்திய இலக்கிய விருதாகும்.

- இது 2010-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது ஆங்கிலம் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இந்தியரின் கைவண்ணங்களை அங்கீகரிக்கின்றது.

***2018 இந்து புனைவு பரிசுப் பட்டியல்***

| புத்தகம் | ஆசிரியர் |
|---|---|
| Half the night is gone | அமிதபா பக்சி |
| A Day in the Life: Stories | அஞ்சும் ஹாசன் |
| All the lives we never lived | அனுராதா ராய் |
| Requiem in Raga Janki | நீலம் சரண் கௌர் |
| Poonachi | பெருமாள் முருகன் மற்றும் N. கல்யாண ராமன் |
| The Aunt Who Wouldn't Die | சிர்சென்டு முகோபாத்யாய் மற்றும் அருணவா சின்கா |

***2018 இந்து புனைவு அல்லாத பரிசுப் பட்டியல்***

| புத்தகம் | ஆசிரியர் |
|---|---|
| Interrogating my Chandal Life | மனோரஞ்சன் பியாபாரி மற்றும் சிப்ரா முகர்ஜி |
| The Bengalis | சுதீப் சக்கரவர்த்தி |
| Remnants of a separation | ஆஞ்சல் மல்கோத்ரா |
| Indira Gandhi : A life in nature | ஜெய்ராம் ரமேஷ் |
| The most dangerous place : A History of the United States in South Asia | ஸ்ரீநாத் ராகவன் |

## சுசீலா தேவி இலக்கிய விருது

- எழுத்தாளர் நமீதா கோகலே தனது “Things leave behind” என்ற புதினத்திற்காக சுசீலா தேவி இலக்கிய விருதினை வென்றிருக்கின்றார்.



- போபால் இலக்கிய மற்றும் கலைத் திருவிழாவின் துவக்கப் பதிப்பில் "பெண் எழுத்தாளரால் எழுதப்பட்ட சிறந்த புனைவுப் புத்தகம்" என்ற பிரிவில் இவர் விருதளிக்கப்பட்டார்.

- - - - - - - - - - - - - - -